# செந்தமிழ்

தொகுதி : 93 டிசம்பர் 1999 பகுதி : 12

திங்கள் இதழ்

மதிப்புறு ஆசிரியர் *மா. தனுக்கோடி பாண்டியன்* பி.ஏ., பி.எல்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

ஆசிரியர் பேரறிஞர் *நா. பாலுசாமி*

எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்., பி.எச்டி.,

## தமிழ்ச்சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| திரு. நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திரு. எம். பி. ஆர். மலையாண்டி என்ற அசோக் | துணைத்தலைவர் |
| திரு. மா. தனுக்கோடிபாண்டியன் | செயலாளர் |
| திரு. மா. சங்கரபாண்டியன் | உறுப்பினர் |
| திரு. கே. எஸ். டி. இராசேந்திரன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். என். சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. கே. கந்தசாமி | உறுப்பினர் |
| திரு. வெ. பழனிச்சாமித்தேவர் | உறுப்பினர் |
| திரு. அ. சாமிஐயா | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா. அழகுமலை | உறுப்பினர் |
| திரு. க. சி. அகமுடைய நம்பி | உறுப்பினர் |
| திரு. எஸ். பரங்குன்றம் | உறுப்பினர் |

## செந்தமிழ் ஆசிரியர் குழு

| | |
|---|---|
| பேரறிஞர். | நா. பாலுசாமி (ஆசிரியர்) |
| பேரறிஞர். | தமிழண்ணல் |
| பேரறிஞர். | செ. கந்தசாமி |
| டாக்டர். | என். சேதுராமன் |
| பேரறிஞர். | ம. ரா. போ. குருசாமி |
| பேரறிஞர். | சி. கதிர் மகாதேவன் |
| பேரறிஞர். | கு. துரைராசு |
| பேரறிஞர். | அ. அ. மணவாளன் |
| பெரும்புலவர். | இரா. இளங்குமரன் |
| பேரறிஞர். | அ. தட்சிணாமூர்த்தி |
| பேரறிஞர். | எஸ். எம். கமால் |
| பேரறிஞர். | ஈ. கி. இராமசாமி |
| பேராசிரியர். | சே. அரிராமநாதன் |
| பேரறிஞர். | அ. மா. பரிமணம் |

# செந்தமிழ்

## திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 1000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

மதிப்புறு ஆசிரியர் *மா. தனுக்கோடி பாண்டியன்* பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

ஆசிரியர் பேரறிஞர் *நா. பாலுசாமி*
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்., பி.எச்டி.,

# பொருளடக்கம்


1. நிறுவனர் நினைவு அஞ்சலி ... 417
   -பேரறிஞர் வீ. காந்திமதி

2. எல்லோருக்கும் தொல்காப்பியம் ... 429
   - பேரறிஞர் நா. பாலுசாமி

3. திருவிளையாடற்புராணச் சிறப்பு ... 440
   - பேரறிஞர் மு. அருணகிரி

4. நூல் மதிப்புரை ... 454

# நிறுவனர் நினைவு அஞ்சலி

பேரறிஞர் **வீ. காந்திமதி**

எடுப்பான தோற்றம், மிடுக்கான மீசை, காதிலே கடுக்கன், நெற்றியிலே திருநீறு, அதன் நடுவே சந்தனப்பொட்டு, தலையில் சரிகைக் குல்லாய், நீண்ட அங்கி, நிறைந்த உள்ளம், குன்றாத வள்ளல் தன்மை, அழியாத அழிக்க முடியாத தமிழ்ப்பற்று, எவரையும் அரவணைத்துப் போற்றும் உளப்பாங்கு, அஞ்சாத நெஞ்சம் - இத்தனைக்கும் உரியவர் பாண்டித்துரையார்.

*"உருவிலே கவர்ச்சி மிக்கான்*
*உளத்திலே யன்பு மிக்கான்*
*கருவிலே திருவு கொண்டான்*
*கலையிலே புலமை மிக்கான்*
*பெருமைசால் பாண்டித்தேவன்*
*பெருந்தகைச் சங்கங் கண்டு*
*பருவமா மழை போலிங்கே*
*பைந்தமிழ்க் குதவி னானே"*

-தவத்திரு. கவியோகி சுத்தானந்த பாரதி

அங்கயற்கண்ணி மீனாட்சி, கோனாட்சி செய்து வரும் மதுரையம்பதியில், தமிழ்ப் பணியே தலை சிறந்த பணி என்று இன்றளவும் தமிழ்த் தொண்டாற்றி வரும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்த பெருமைக்குரியவர் பொன். பாண்டித்துரைச்சாமித் தேவர். என்றும் நிலைபேறுடைய தமிழ்ச்சங்கத்தின் தன்னேரில்லாத நிறுவனர் இவர். ஆதலால் "தமிழ் வள்ளல்" பாண்டித்துரைத்தேவர் என்ற பாராட்டுக்கும், புகழுக்கும் இவர் உரியவரானார்.

## பாண்டித்துரைத் தேவரின் இளமைப் பருவம்

ஆற்றலும் அறிவும் சான்ற பாலவநத்தம் குறுநிலமன்னர் பொன்னுச்சாமித்தேவரின் மூன்றாம் மகன் பாண்டித்துரைத்தேவர். இவர் 21.3.1867-ல் பிறந்தார். இவரது இளமைப்பெயர் உக்கிர பாண்டியன். தந்தையார் பொன்னுச்சாமித்தேவர் இயற்கை

எய்தியபோது பாண்டித்துரைத்தேவருக்கு வயது மூன்று தான். இவருடைய சிறிய தந்தையாரின் மகன் பாசுகரசேதுபதி (3.11.1868) யும், இவரும் அளவற்ற அன்பு கொண்டிருந்தனர்.

தந்தையார் பொன்னுச்சாமித் தேவரின் மறைவுக்குப் பின்னர் மூன்று மகன்களும் 'ஏஜென்டு சேஷாத்திரி ஐயங்கார்' என்பவரின் பொறுப்பில் வளர்ந்தனர். மூவரும் இளைஞர்களாக இருந்தமையால் பாலவநத்தம் சமீன் பொறுப்புகளையும், அரசின் நிருவாகப் பொறுப்புகளையும் சேஷாத்திரி ஐயங்காரே பாதுகாத்து வந்தார்.

பாண்டித்துரைத் தேவரின் இளம்பருவம் முதல் உடனிருந்து தமிழறிவூட்டியவர் அழகர்ராசு என்ற புலவராவார். சிறந்த வழக்கறிஞரான வெங்கடேசுவர சாஸ்திரி என்பவர், ஆங்கிலமொழி ஆசிரியராக இருந்தவர். தேவர் அவர்கள் உயர்கல்வி நிறுவனத்திலும் கல்வி பயின்றார்.

இராமநாதபுரத்தில் சுவார்டஸ் துரை மகனாரால் நெடுங்காலத்துக்கு முன் நிறுவப்பெற்று நடைபெறும் உயர்தரக் கலாசாலையில் சேர்ந்து ஆங்கிலப் பயிற்சி பெற்று வந்தார் அக்காலத்தில் அக்கலாசாலைத் தலைவராயிருந்த ஷீட்டி துரை என்பவர் தேவரின் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி வந்தார். தேவருடன் கலாசாலைத் தோழராக இருந்தவர்களுள் பூச்சி சீனிவாச ஐயங்காரும் ஒருவர்.

## பாலவநத்தம் சமீன்

பாண்டித்துரைத் தேவரின் 18ஆம் வயதில் (1884) சேஷாத்திரி ஐயங்கார் அதுவரை தாம் கவனித்து வந்த சமீன் பொறுப்புகளைத் தேவரிடம் ஒப்படைத்தார். இவர் தமையன்மார் பெரியசாமித் தேவரும், சீமைச்சாமித் தேவரும் திடீரென இறந்ததால் அவர்களின் சமீன் பொறுப்புகளும் பாண்டித்துரைத் தேவரிடம் கொடுக்கப்பட்டன. இராமநாதபுர எல்லைக்குள் இருந்த பாலவநத்தம் என்ற சமீனும் வேறுபல கிராமங்களும் இவருக்கு உரிமையாயின. சமீன் பொறுப்புகளைக் கவனித்துக் கொண்டே தொடர்ந்து கல்வி, கலைப்

பயிற்சிகளில் ஈடுபட்டார். அக்காலத்தில் அவைக்கள வித்துவானாக விளங்கிய சதாவதானி முத்துச்சாமி ஐயங்காரிடம் கம்பராமாயணத்திற்கெனத் தனிப்பயிற்சி பெற்றார். சைவ நூல்களில் தேர்ச்சிபெற்ற ராமசாமி பிள்ளை, திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த பழனிக்குமாரத் தம்பிரான் ஆகியோரிடம் சைவ தத்துவத்தைக் கற்றார். சைவசமயக்கொள்கைகளைத் தம் வாழ்விலும் கடைப்பிடித்தார்.

பாசுகர சேதுபதி சேதுநாட்டின் அரசராக 1889ல் முடிசூட்டப் பெற்றார் தன் அன்புக்குரிய இளவல் அரசரானவுடன், சேதுநாட்டின் நிர்வாகத்தினைக் கவனித்துவந்த பாண்டித்துரைத்தேவர், ராமநாதபுரத்தில் சோமசுந்தர விலாசம் என்ற மாளிகையை அமைத்து அங்கேயே தங்கினார். இராமநாதபுரத்தில் பாசுகர சேதுபதியும், பாண்டித்துரைத்தேவரும் ஆற்றியுள்ள பணிகளைப் புலவர் பெருமக்கள் சிறப்பித்துப் பாடியுள்ளனர். சிகாகோ நகரில் நடந்த உலக சமயப்பேரவைக்கு வீரத்துறவி விவேகானந்தரை அனுப்பி அவரது அறிவாற்றலை உலகோர் அறியும்படி செய்த பெருமைக்குரியவர் பாசுகர சேதுபதி என்பது அனைவரும் அறிந்ததே.

## புலவரவை

தந்தையார் பொன்னுச்சாமித்தேவரின் தமிழறிவும் ஆராய்ச்சியும் பாண்டித்துரைத்தேவரிடமும் இருந்ததால் தந்தையாரின் அவை போலவே மகனாரின் அவையும் பொலிவுபெற்று விளங்கியது. சோமசுந்தரவிலாசத்திலுள்ள அவையில் அறிஞர்கள் ஒன்றுகூடித் தமிழாய்ந்து வந்தனர். அவையில் நிகழும் அன்றாட நிகழ்ச்சிகள் சிலவற்றை மு. இராகவையங்கார் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

திருக்குறள் பரிமேலழகர் உரையுடன் ஒவ்வொருநாளும் ஒவ்வொரு அதிகாரமாகச் சொற்பொழிவுகள் நிகழ்த்தல்.

புராண நூல்களுள் ஏதேனும் ஒன்றுபற்றி நாள்தோறும் படித்துப் பொருள் ஆராய்தல் ஈற்றெழுத்துக் கவிகள் கூறுதல்.

ஒரு பொருள்குறித்து அறிஞர்கள் பேசுதல். இலக்கியங்களின் பொருளும் நயமும் அறிதல்.

சங்கப்பலகையில் பல நூல்கள் அரங்கேற்றம் செய்யப்பட்டது போல் பாண்டித்துரைத்தேவரின் அவையிலும் பல நூல்கள் அரங்கேறின.

## இலக்கியப்படைப்பு

தேவர் அவர்கள் இராமநாதபுரத்தைச்சேர்ந்த சிவஞானபுரத்து முருகக்கடவுள் மீது காவடிச்சிந்து, திருவாவடுதுறை ஆதீனத்துத் திராவிடமாபாடிய கர்த்தராகிய சிவஞான சுவாமிகள் மீது இரட்டை மணிமாலை ஆகிய இரண்டு நூல்களைப் படைத்துள்ளார். இவர் பாடிய இராஜராஜேஸ்வரி பதிகம் என்ற நூல் தனிச்செய்யுள் சிந்தாமணியில் இடம்பெற்றுள்ளது.

இவர் 17-12-1889ல் உ.வே.சாமிநாதய்யருக்குக் கலிவெண்பா யாப்பில் மடலொன்று எழுதியுள்ளார். இம்மடலில் 15 பாடல்கள் உள்ளன. மேலும் இவர் பாடிய 21 தனிப்பாடல்கள் தனிச்செய்யுள் சிந்தாமணியில் இடம்பெற்றுள்ளன.

இவர் செந்தமிழ் இதழில் அரிய செய்யுட்களுக்கு விளக்கவுரைகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், வரலாற்றுக் கட்டுரைகள் எனப் பலபொருட்கள் பற்றி எழுதியுள்ளார் இங்ஙனம் அவர் எழுதியவற்றுள்,

1 அருஞ்செய்யுள் விளக்கம்
2 தமிழ்ப்பழஞ்சரித்ம்
3 தனிச்செய்யுட்கோவை
4 திருக்குறளைப்பற்றிய கதைகள்
5 நூலாராய்ச்சி (கம்பராமாயணம்)
6. இந்திய வீரமாதர் ஆகியன குறிப்பிடத்தக்கன.

## நூல்வெளியீடு

சங்க இலக்கியங்களான அகநானூறு, குறுந்தொகை,

ஐங்குறுநூறு ஆகிய நூல்களைத் தொகுப்பித்த சங்ககால மன்னர்களைப்போலப் பாண்டித்துரைத்தேவரும் தாமே நூல்களைத் தொகுத்து வெளியிட்டதோடன்றித் தமிழ்ச்சங்கச் சான்றுகளைக் கொண்டு நூல்களைத் தொகுத்தும் பதிப்பித்தும் வந்தார். பல சான்றோர் இயற்றிய, தொகுத்த, ஆராய்ச்சி செய்த நூல்களை வெளியிடுவதற்குப் பொருளுதவிகள் பல புரிந்தார். இவ்வாறு உதவி பெற்றவர்களில் உ.வே. சாமிநாதய்யர், சிங்காரவேலு முதலியார், நா. கதிரைவேற் பிள்ளை, சுன்னாகம் அ. குமாரசுவாமிப்பிள்ளை, சர்க்கரை ராமசாமிப்புலவர், இராமசாமிப்பிள்ளை என்ற ஞானசம்பந்தப் பிள்ளை, காஞ்சி நாகலிங்க முதலியார், சபாபதி நாவலர் ஆகியோர் குறிப்பிடத்தகுந்தோர் ஆவர்.

உ.வே.சாமிநாதய்யர், மணிமேகலை, புறப்பொருள் வெண்பாமாலை, திருவிளையாடற்புராணம், திருவாரூருலா, தேவையுலா ஆகிய நூல்களைப் பதிப்பித்து வெளியிடுவதற்குப் பாண்டித்துரைத் தேவர் துணையாக இருந்தார்.

சிங்காரவேலு முதலியார் எழுதிய அபிதான சிந்தாமணி என்ற நூலும் யாழ்ப்பாணத்து கதிரைவேற்பிள்ளை என்பார் இயற்றிய தமிழ்ச்சொல்லகராதி என்ற நூலும் பாண்டித்துரைத்தேவரின் உதவியால் சங்கப்பிரசுரங்களாக வெளியிடப்பட்டன.

பாண்டித்துரைத்தேவரிடமிருந்து ஏடுகளும், குறிப்புகளும் பெற்று நூலாராய்ச்சி செய்து வெளியிட்ட சான்றோர் பலராவர். ரா. இராகவையங்கார், மு. இராகவ ஐயங்கார், திரு. நாராயணய்யங்கார் போன்றோர் செந்தமிழிதலில் வெளியிட்ட நூல்களுக்குப் பாண்டித்துரைத் தேவரிடமிருந்தே ஏடுகள் கிடைத்தனவென்று குறித்துள்ளனர். உ.வே.சாவுக்குச் சிந்தாமணி ஏட்டுச்சுவடிகளையும், வேறுபல ஏடுகளையும் கொடுத்துதவியுள்ளார்.

## பாண்டியம் எனும் நூல்

திரு. நாராயணய்யங்கார் எழுதிய எழுத்துச்சீர்திருத்தம் பற்றிய உரைநடை நூலுக்குப் பாண்டித்துரைத்தேவரின் பெயரைச் சூட்டி

மகிழ்ந்தார். பாண்டியம் என்னும் அந்த நூல் எழுத்துசீர்திருத்தம் பற்றியது. எழுத்துக்களுக்கு அச்சுக்கருவிகள் அமைந்ததால் ஒரே எழுத்து அமைப்பில் நாட்டில் வழங்குகின்ற எல்லா மொழிகளும் எழுதப்பட வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையில் புது எழுத்துக்களைத் திரு நாராயணய்யங்கார் இந்நூலில் அமைத்துள்ளார்.

'இது பாலவநத்தம் ஜமீன்தாரும், மதுரைத் தமிழ்ச்சங்க ஸ்தாபகரும் அதன் அக்கிராசனருமான ஸ்ரீமான் பொன்.பாண்டித்துரை அவர்களின் பேருபகாரத்தால் முடிக்கப்பெற்றமையால் இதற்கு அவர்கள் பெயரால் பாண்டியம் என்று பெயர் கொடுக்கப் பட்டிருக்கிறது' என்று தாம் பெற்ற பிள்ளைக்குப் பெயர்சூட்டி மகிழ்தல் போல் நூலுக்குப் பெயர்சூட்டி மகிழ்கிறார் திரு. நாராயண அய்யங்கார்.

## கல்விநிலையம்

இராமநாதபுரத்தில் பாண்டியன் ஆரம்பப்பள்ளி (பாண்டியன் செகண்டரி வித்தியாசாலை) ஒன்றை ஏற்படுத்தி அதற்கு வேண்டிய பொருளுதவி அனைத்தையும் ஏற்றுக்கொண்டார். அப்பள்ளி சில ஆண்டுகளில் உயர்நிலைப்பள்ளியாகும் தகுதிபெற்றது. இதனடிப்படையில்தான் அவர் தோற்றுவித்த மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் கலாசாலையையும் தோற்றுவித்தார் என்று கருத முடிகிறது.

## மதுரைத் தமிழ்ச்சங்கம்

பாசுகரசேதுபதிக்கு மதுரையில் தமிழ்ச்சங்கம் ஒன்றை நிறுவ வேண்டுமென்ற விருப்பம் இருந்தது என்பதை அவருடைய 1893ம் ஆண்டு ஜனவரித்திங்கள் 13ம்நாளில் எழுதிய ஆங்கில நாட்குறிப்பினால் அறியலாம். அதில் எனது வாழ்வின் குறிக்கோள்கள் என்ற தலைப்பில் 33 குறிக்கோள்களைக் குறித்துள்ளார். அவற்றுள் தமிழ்ச்சங்கம் ஒன்றை நிறுவவேண்டும் என்பதும் ஒன்றாகும். தமிழ்ச்சங்கம் ஒன்றை அமைக்கவேண்டு மென்ற பாசுகரசேதுபதியின் விருப்பம் பாண்டித்துரைத்தேவரால் நிறைவேறியது.

மதுரையில் கோடைகாலத்தில் பாண்டித்துரைத்தேவர் தங்குவதற்கென ஒரு மாளிகை இருந்தது. (இன்றுவரை தமிழ்ச்சங்கம் இயங்கிவரும் இடம்) இவர் மதுரைக்கு வரும்பொழுது மேடைகளில் சொற்பொழிவாற்றி மதுரை மக்களைக் கவருவதுண்டு. நாட்டுத்தொண்டில் தம்மை ஈடுபடுத்திய வ.உ.சி, திரு.வி.க. போன்றோரின் நட்புக் கிடைத்ததால் சிறந்தமுறையில் பேச விரும்பினார். எனவே தம் சொற்பொழிவிற்காகக் கம்பராமாயணம் திருக்குறள் ஆகிய இருநூல்களையும் பெறுவதற்குச் சிலர் உதவியை நாட ஒருவரிடமும் அந்நூல்கள் கிடைக்கப் பெறவில்லை. சங்கம் இருந்த மதுரையில் தமிழுக்குக் 'கதி (க-கம்பராமாயணம், தி-திருக்குறள்) இல்லையே என வருந்தினார். நூல்கள் மட்டுமா இல்லை. தமிழ்மொழியே ஆதரிப்பாரின்றிக் கதியிழந்து விட்டது. இக்குறைநீங்க யாதுசெய்தல் வேண்டும்? என்று நண்பர்களுடன் பலவாறு ஆராய்ந்தார். தாய்மொழி வளர்ச்சிபெறவேண்டுமென்ற பாண்டித்துரைத் தேவரின் நல்லெண்ணம் நிறைவேற, ஆக்கத்தையும், ஊக்கத்தையும் டி.சீனிவாசய்யங்கார், சேதுபதி உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் எஸ்.சாமிநாதய்யர் போன்ற சான்றோர்கள் ஆதரித்தனர். இவர்கள் தந்த ஊக்கம் பாண்டியமன்னர்கள் மதுரையில் தமிழ்ச்சங்கத்தை நிறுவியதுபோலத் தாமும் மதுரையில் ஒரு தமிழ்ச்சங்கத்தை நிறுவவேண்டுமென்ற எண்ணத்தை ஏற்படுத்தியது.

## சென்னை மாகாண அரசியல் மாநாடு

1901ம் ஆண்டு மே திங்கள் 21,22,23 ஆகிய மூன்று நாட்களும் மதுரையில் கூடியது. அம்மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவராயிருந்த பாண்டித்துரைத்தேவர் மாநாட்டு முடிவில் தமிழ்ச்சங்கம் தொடங்க நினைத்துள்ள தமது கருத்தை மக்களிடையே எடுத்துரைத்தார். மறுநாளான மே24ம் நாளில் சேதுபதி உயர்நிலைப்பள்ளியிலுள்ள மண்டபத்தில் சங்கம் தொடங்குவதற்குரிய ஆய்வுப் பேரவைக்கு மாநாட்டிற்கு வந்திருந்த பெரியோர்களை அழைத்து அவர்களோடு கலந்து பேசி தமிழ்ச்சங்கம் அமைப்பதற்குரிய விதிமுறைகளை வகுத்தார்.

தேவர் அவர்கள் 1901 மேதிங்கள் 24ம் நாளில் எடுத்த முடிவினை நான்கு திங்களில் நிறைவேற்றிார். பெருமக்களைச் சங்கத்தின் வளர்ச்சிப்பணிக்குத் துணையாக இருக்க வேண்டுமென விண்ணப்பம் அனுப்பியதை உவேசாவுக்கு எழுதிய மடல் ஒன்றினால் அறியலாம்.

அம்மடல். "நிகழா நின்ற பிலவ வருடம் வைகாசி மாதம் 12ம் தேதியாகிய 1901ஆம் ஆண்டு மே மாதம் 24ம் தேதி முதல் மதுரையில் ஓர் தமிழ்ச்சங்கம். செந்தமிழ் அபிவிருத்தியின் பொருட்டு நடத்த நிச்சயிக்கப்பெற்றுள்ளது. இக்கருத்தை உடன்வரும் பத்திரிகை வாயிலாய் நன்கறியலாகும். தமிழபிமானிகளாகிய தாங்களும் இச்சங்கத்தின் தமிழ் வித்துவக்கழகத்தில் ஒருவராக இருந்து பாஷா அபிவிருத்திக்காக உதவிகளைப் புரிந்து ஆதரித்துவருவதற்குத் தங்கள் சம்மதத்தை அளிக்க மிக்கத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்".

மதுரையில் 4ம் தமிழ்ச்சங்கம் ஒன்று 14-1-1901ல் கூட்டப்பெறும் என்று அழைப்பிதழ்களின் வாயிலாகவும். திங்களிதழ்களின் வாயிலாகவும் அறிவிக்கப்பட்டது. தமிழ்ச்சங்கத் தொடக்கவிழாவிற்குப் பாசுகரசேதுபதி தம்முடைய பரிவாரங்க ளுடன் வந்திருந்தார். உவேசாமிநாதய்யர் சேதுசமஸ்தான வித்துவான் ரா. ராகவ அய்யங்கார். வை.சடகோப ராமானுஜசாரியார். சோழவந்தான் அ. சண்முகம்பிள்ளை. பின்னத்தூர் நாராயணசுவாமி அய்யர். வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார். திரு.மயிலை சண்முகம்பிள்ளை. திரு. நாராயணய்யங்கார். மு. ராகவையங்கார் ஆகியோரும் வந்திருந்தனர். இவர்களின் நல்லாசியுடன் மதுரை வடக்குவெளிவீதியிலுள்ள சேதுபதி உயர்நிலைப்பள்ளி மண்டபத்தில் பாசுகரசேதுபதியின் திருமுன்பு அறிஞர்கள் சூழ்ந்திருக்கப் பிலவ வருடம் ஆவணித்திங்கள் 31ம் நாள் (செப்டம்பர் 14, 1901) ஞாயிற்றுக்கிழமை பானுவாரமும் சித்திரை நான் மீனும் கூடிய நன்னாளில் பகல் 1.30 மணிக்குமேல் 2.45 மணிக்குள் தனுலக்கினத்தில் மதுரைத் தமிழ்ச்சங்கம் தொடங்கப்பெற்றது.

## தமிழ்ச்சங்கத்தின் உட்பிரிவுகள்

தமிழ்ச்சங்கத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றவும் தமிழ்ச்சங்கம் நன்முறையில் இயங்குவதற்கெனவும் நான்கு வகை அமைப்புகள் நிறுவப்பெற்றன.

1 'செந்தமிழ்க் கலாசாலை' – இதன் மாணவர்களுக்கு உண்டி, உடை, உறையுள் முதலியன கொடுத்துச் செந்தமிழ்க் கல்வி கற்பிக்கப்பட்டது.

2. 'பாண்டியன் புத்தகசாலை' – யாவரும் வந்து படிப்பதற்கான வகையில் பற்பல தமிழ் வடமொழி நூல்கள் இதில் தொகுத்து வைக்கப்பெற்றன.

3. 'தமிழ்ச் சங்க முத்திராசாலை' – இதுவரை வெளிவராத நூல்களை அச்சில் கொண்டு வருவதற்காக நிறுவப்பெற்றது.

4. 'செந்தமிழ் இதழ்' – தாய் மொழிப்பற்று மிக்கார் விரும்பிப் படிக்கும் வகையில் அறிவு நலம் தரும் ஆராய்ச்சி இதழாகத் திங்கள் தோறும் வெளியிடப் பெற்றது

இவ்வமைப்புகளின் வழியாகத் தமிழ்க்கல்வியும், தமிழ்த் தேர்வுகளும், நூல் வெளியீடுகளும், நூலாராய்ச்சிகளும் சங்கத்தாரால் செவ்வனே மேற்கொள்ளப்பட்டன.

## சங்கம் கண்ட பாண்டித்துரைத்தேவர் — பாராட்டு!

பாண்டித்துரைத் தேவர், சங்கத்தைத் தோற்றுவித்தமையைப் பாராட்டிப் பாசுகர சேதுபதி பாண்டித்துரைத் தேவருக்கு மடலொன்று எழுதியுள்ளார், அது:

"இந்த நிறுவனம் தொடங்குவதற்குப் பல ஆண்டுகளாக நினைவில் கொண்டிருந்த என்னுடைய எண்ணத்தைச் செயலாக்கிய பெருமை தங்களையே சாரும். ஆகவே எப்பவும் தங்களுடன் சேர்ந்து இப்பணிகளில் ஈடுபடுவேன் என உறுதி கூறுகிறேன் பொருளாதாரத்திலும் உழைப்பிலும் என்னுடைய பங்கினைக்

கொடுப்பதற்கு எப்பொழுதும் முன்வருவேன்". மேலும் வ.உ.சிதம்பரம்பிள்ளை, பாவேந்தர் பாரதிதாசன், விடுதலைக் கவிஞர் மதுரகவி பாஸ்கரதாஸ் முதலிய பல சான்றோரும் பாராட்டி மகிழ்ந்தனர்.

## ஆங்கில அரசின் பாராட்டு

பாண்டித்துரைத்தேவர், தாம் அமைத்த சங்கத்தின் வழியாக ஆற்றிய கல்விப்பணிக்கென, அக்காலத்தில் இந்தியாவை ஆட்சிசெய்த ஆங்கில அரசு அவரைப் பாராட்டிச் சிறப்பித்துச் சான்றிதழ் வழங்கியது. 1-1-1903ஆம் நாளில் தமிழ்ச்சங்கத்தின் நிறுவனரும் தலைவருமான பாண்டித்துரைத் தேவருக்கு மதுரைத் திருமலை நாயக்கர் அரண்மனையில், மாண்புமிகு அரசர் ஏழாம் எட்வர்டு அவர்களின் பாராட்டுச்சான்றிதழ், சென்னை தலைமைச் செயலராக இருந்த சீமான் ஏ.ஜி.கார்டியு என்பவரால் பொதுமக்கள் நிறைந்த அவையில் வழங்கப்பட்டது.

## தமிழ்ச்சங்கக் கட்டிடம்

தமிழ்ச்சங்கம் தோன்றியபோது அதனை நடத்துவதற்குத் தனி இடம் இல்லை. எனவே பாண்டித்துரைத்தேவர், சேதுபதி உயர்நிலைப்பள்ளிக்கு அருகே உள்ள வெற்று நிலத்தை (இப்போது தலைமை அஞ்சலகம்) தமிழ்ச்சங்கத்திற்கென வாங்கினர். ஆனால் நிலம் வாங்கிய உடனே கட்டிடவேலைகள் நடைபெறாததால், வடக்குவெளிவீதியிலுள்ள தமக்குச்சொந்தமான மாளிகையைச் சங்கச் செயல்களுக்காக வழங்கினார். பாண்டித்துரைத்தேவர் மாளிகையில், 1902ஆம் ஆண்டு 25ஆம் நாளிலிருந்து சங்கம் செயல்படலாயிற்று. இன்றும் அந்த மாளிகை, 'தமிழ்ச்சங்கம்' என்ற பெயருடன் மிளிர்கிறது.

## அறநிலையம்

தமிழ்ச்சங்கம் தொடங்கிய எட்டாண்டுகளுக்குப் பின்னர் 16-10-1908ல் 'இலக்கியம், அறிவியல், மற்ற அமைப்புக்களின் 1860ஆம் ஆண்டுச்சட்டத்தின் கீழ் மதுரைத் தமிழ்ச்சங்கம் 'ஓர் அறநிலையமாக'ப் பதிவு செய்யப்பட்டது.

## சுதேசிக் கப்பலுக்கு உதவி

இந்திய விடுதலைக்குப் போராடிய வ.உ.சிதம்பரம்பிள்ளை தொடங்கிய 'சுதேசி ஸ்டீம் நாவிகேசன்' கம்பெனிக்குப் பாண்டித்துரைத்தேவர் 1906ம் ஆண்டில் ரூபாய் ஒரு லட்சத்தை முதலீடாகக் கொடுத்து, அதன் பங்குதாரராகத் தமிழ்ச்சங்கத்தைப் பதிவு செய்தார். தமிழ்ச்சங்கத்திற்குப் புதுவருவாய் கிடைக்கும் வகையில், பாண்டித்துரைத்தேவர் இந்த ஏற்பாட்டினைச் செய்தார். ஆனால் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் சர்வாதிகாரப் போக்கால் கப்பல் கம்பெனி ஒடுக்கப்பட்டதும் வஉசி சிறையிலடைக்கப்பட்டதும் நாடறிந்த உண்மை. வஉசி அவர்களுக்கு உதவிசெய்த பெருந்தன்மையில் தமிழ்ச்சங்கம் தழைக்க வேண்டுமென்ற உளப்பாங்கே பாண்டித்துரைத்தேவரிடம் மேலோங்கி இருந்தமையால், தமிழ்ச்சங்கத்தின் பெயரில் ஒரு லட்சம் கொடுத்திருக்கிறார். தமிழ்மொழியின்பால், அவர் அமைத்த சங்கத்தின்பால் அவர் கொண்ட பற்றும், பக்தியும் பெரிது என்பதற்கு இந்நிகழ்ச்சி சிறந்த சான்றாகிறது.

## மறைவு

சங்கம் தொடங்கிய பத்தாம் ஆண்டில் 1911ம் ஆண்டு டிசம்பர் இரண்டாம் நாளில் (2-12-1911) இந்தியத் தமிழ்ச்சங்கத்து நிலவு வானுலக நிலவாக - இவ்வுலகை விட்டுப் பிரிந்தது. பாண்டித்துரைத் தேவரின் மறைவு தமிழ்ச்சங்கத்துக்கு மட்டுமின்றித் தமிழகத்திற்கே மிகப்பெரிய இழப்பாகும். அவர் மறைந்தபோது கையற்று நின்ற பாவலர்களும், அறிஞர்களும், புலவர்களும் எழுதிய இரங்கல் கடிதங்களும், அனுதாபக் கட்டுரைகளும், கையறு நிலைப்பாடல்களும் மிகப்பலவாகும். அவற்றுள் தெரிந்தெடுத்த சிலமட்டும் செந்தமிழ் பத்தாவது தொகுதியாக வெளியிடப்பட்டுள்ளது. ஓர் இதழ் முழுவதும் அவரது மறைவுச் செய்திகளால் நிறைந்தது. எஞ்சியுள்ள இரங்கற் செய்திகள் கணக்கிலடங்காதவை என்று செந்தமிழாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

பாண்டித்துரைத் தேவரின் வளர்ப்பு மகனான சோமசுந்தரபாண்டியத்தேவர் குழந்தைப் பருவத்தினராக இருந்தமையால், தேவரின் தமையனார் மகனான இராமச்சந்திரத்தேவரிடம் பாலவனத்தம் சமீன் பொறுப்புகள், சொத்துக்கள் அனைத்தும் ஒப்படைக்கப்பட்டன. அவ்வகையில் மதுரைத் தமிழ்ச் சங்கக் கட்டிடத்தையும், அதிலுள்ள பொருட்களையும் தமக்கே உரியவை என்று உரிமை பாராட்டிய இராமச்சந்திரத் தேவர், மதுரை ஆணையரது உதவியுடன் சங்கத்தைக் கைப்பற்றினார். கே.இராகவையங்கார், டி.சி.சீனிவாச ஐயங்கார், பி.சா.சுப்பிரமணிய ஐயர், அப்துல் சுவான் சாகிப் போன்ற மதுரை நகர்ப் பெரியோர்கள் ஆணையரைப் பேட்டி கண்டு 'தமிழ்ச்சங்கம்' பதிவுசெய்யப்பட்ட பொதுநிலையம் என்பதைச் சான்றுகளுடன் எடுத்துக்காட்டிச் சங்கத்தை மீட்டனர். ஆனாலும் சங்கக் கட்டிடத்திற்காகவும், பொருட்களுக்காகவும் ஒரு பெருந்தொகையை (சங்கம் கட்டுவதற்காக இருந்த காலி மனையை அரசாங்கத்திற்கு விற்றதால் கிடைத்த பணம்) கொடுத்தனர்.

## நிறைவு

பாண்டித்துரைத்தேவர் தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தமிழ்ச்சங்கத்திற்கே அருளினார். அன்னாரின் பூதவுடல் மறைந்து இருக்கலாம்; ஆனால் அவரது புகழுடம்பு இதோ - இன்றும் மதுரைத் தமிழ்ச்சங்கமாக நின்று நிலைபெற்றுள்ளது. அவரது ஆன்மா தமிழ்ச்சங்கத்திற்குள் உலவிக்கொண்டிருக்கிறது. "தமிழே உருவெடுத்தாற்போல் தேவர் அமர்ந்திருந்தார்" என்று திருவிக குறிப்பிட்டதுபோல் தமிழாக, தமிழ்ச்சங்கமாகப் பாண்டித்துரைத் தேவர் வாழ்ந்துகொண்டிருக்கிறார்.

- *பேரறிஞர்* **நா.பாலுசாமி**

(முன்னிதழ்த் தொடர்ச்சி)

## சூத்திரம் 408

(அடிமறி மேலும் ஒருமுடிவு)

*பொருள்தெரி மருங்கின்*
*ஈற்றடி இருசீர் எருத்துவயின் திரிபும்*
*தோற்றமும் வரையார் அடிமறி யான.*

*(பொ-ரை)* பொருளை ஆராயும்போது, அடிமறிச் செய்யுளில் ஈற்றடியின் ஈற்றுச்சீர் எருத்தடியில் சென்று திரிதலும் நீக்கார்; திரியும் என்பது பொருள். எருத்தடி - ஈற்றயல் அடி; கடைசி அடிக்கு முந்திய அடி

அஃதாவது, ஒரு செய்யுளின் ஈற்றடியின் இறுதிச்சீர் அவ்வடியிலேயே ஈற்றயற்சீர் நின்ற இடத்தில் மாறிநின்று பொருள்தரும் என்பதாம். சேனாவரையர் எடுத்துக்காட்டுக் காட்டவில்லை. இளம்பூரணர் பின்வரும் பாடலைக் காட்டினார்.

*(எடு)* *"சூரல் பம்பிய சிறுகான் யாறே*
*சூரர மகளிர் ஆரணங்கினரே*
*சாரல் நாட நீவரு தீயே*
*வாரல் எனினே யானஞ் சுவலே"*

- இதில் வாரல் எனினே யானஞ்சுவலே என்ற ஈற்றடியில் உள்ள அஞ்சுவல் என்பதனை இதற்குமுன்னுள்ள யான் என்ற இடத்தில் மாற்றி அமைத்து, அஞ்சுவல்யானே என அமைக்க என்பர் இளம்பூரணர்.

## சூத்திரம் 409

*(மொழிமாற்று)*

*மொழிமாற்று இயற்கை*

*சொல்நிலை மாற்றிப் பொருள்எதிர் இயைய*
*முன்னும் பின்னும் கொள்வழிக் கொளாஅல்.*

*(பொ-ரை)* செய்யுளில் சொற்கள் பொருள் பொருத்தமின்றிக் கிடப்பின், பொருட்பொருத்தம் உண்டாகுமாறு சொற்களை முன்னும் பின்னும் மாற்றி அமைத்துக் கொள்ளுதல் மொழிமாற்றின் இயல்பாகும்.

*(எடு)* *குன்றத்து மேல குவளை, குளத்துள*
*செங்கோடு வேரி மலர் - இதனைச் செங்கோடு குன்றத்து மேல எனவும், வேரிமலர்க்குவளை குளத்துள எனவும் கூட்டிப் பொருள்கொள்ளல்வேண்டும்*

**சூத்திரம் 410**

*(தொகைச்சொல்)*

*த ந நு எ எனும் அவைமுதல் ஆகிய*
*கிளை நுதல் பெயரும் பிரிப்பப் பிரியா*

*(பொ.ரை)* த, ந, நு, எ என்னும் எழுத்துக்களை முதலில் பெற்ற கிளை (உறவு) குறித்து வரும் பெயர்களும் பிரிக்கப்படா.

அவை தமன், தமள், தமர்; நமன், நமள், நமர்; நுமன், நுமள், நுமர்; எமன், எமள், எமர் முதலியனவாம்.

இவையே அன்றிப் பிற கிளைப்பெயர்களும் பிரிக்கப்படா என்பது, 'பெயரும்' என்பதில் உள்ள உம்மையால் கொள்ளப்பட்டது.

*(எடு)* வெற்பன், பொருப்பன் - இவை மலைநாடனைக் குறிக்கும் திணைப்பெயர்கள். இவற்றைப் பிரித்தால், வெற்பு+அன் என்றும், பொருப்பு+அன் என்றும் பகுதி விகுதிகளாகப் பிரிக்கலாம் அவ்வாறு பிரித்தாலும், பகுதிகளாகிய வெற்பு, பொருப்பு என்பன தம் பொருளைத் தந்து நிற்கும். ஆனால், தமன், எமன் என்பனவற்றைத் தம்+அன், எம்+அன் என்று பிரித்தால்

தம், எம் என்னும் பகுதிகள் பொருளுணர்ந்தாமையால் 'பிரிப்பப் பிரியா' என ஆசிரியர் கூறுகிறார்.

## சூத்திரம் 411

*(அடுக்கிவரும் தொகைகள்)*

*இசைநிறை அசைநிலை பொருளொடு புணர்தலென்று*
*அவை மூன்று என்ப ஒரு சொல் அடுக்கே.*

*(பொ. ரை)* இசைநிறையும், அசைநிலையும், பொருள் வேறுபட்டுப் புணர்தலும் என ஒரு சொல் அடுக்கு மூன்று வகைப்படும்.

*(எடு)* அ) 'ஏ ஏ ஏ ஏ அம்பன் மொழிந்தனன்' – இஃது இசை நிறை (ஏ ஏ – ஒருசீர், தேமா; ஏ ஏ – மற்றொரு சீர், தேமா) பாட்டின் இசைநிறைக்க வந்தமை காண்க.

ஆ) 'அன்றே, அன்றே' – அசைநிலை (பொருளற்றவை)

இ) பாம்பு, பாம்பு ; வைதேன் வைதேன் – அடுக்கு, இவை முறையே விரைவு பற்றியும் உடன்பாடு அல்லது துணிவு பற்றியும் வந்த அடுக்குகள்.

இவ்வடுக்குகள் பெயர், வினை, இடை மூன்று பற்றியும் வரும்.

## சூத்திரம் 412

*(தொகைமொழிகள்)*

*வேற்றுமைத் தொகையே உவமத் தொகையே*
*வினையின் தொகையே பண்பின் தொகையே*
*உம்மைத்தொகையே அன்மொழித்தொகையென்று*
*அவ்வாறு என்ப தொகைமொழி நிலையே.*

*(பொ-ரை)* வேற்றுமைத் தொகை, உவமத் தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித் தொகை எனத் தொகைச் சொற்கள் ஆறு வகைப்படும். இவை தொகை நிலைத் தொடர்கள் எனவும் கூறப்படும்.

இரண்டு முதலிய சொற்கள் சேர்ந்து வந்து பொருள் நிற்பது தொடர் அல்லது சொற்றொடர் எனப்படும். இத்தொடர் தொகைநிலைத்தொடர், தொகா நிலைத்தொடர் என இருவகைப்படும். மரம் வெட்டினான், காடு சென்றான் என்பன தொகை நிலைத் தொடர்களாகும். இவை தொகை எனவும் படும். மரத்தை வெட்டினான், காட்டுக்குச் சென்றான் என்பனவற்றில் ஐ, கு ஆகிய வேற்றுமை உருபுகள் மறையாமல் விரிந்து நிற்பதால் இவை தொகா நிலைத்தொடர்கள் எனப்படும். அஃதாவது, வேற்றுமை உருபு முதலியன தொக்கு (மறைந்து) நிற்பன தொகை என்றும், விரிந்து நிற்பின் தொடர் என்றும் (தொகாநிலைத்தொடர்) கூறல் வேண்டும். விரிவு பின்வரும் தனிச்சூத்திரங்களில் காண்க.

## சூத்திரம் 413

*(வேற்றுமைத்தொகை)*

*அவற்றுள்*
*வேற்றுமைத் தொகையே வேற்றுமை இயல*

*(பொ-ரை)* வேற்றுமைத் தொகை அவ்வேற்றுமை உருபு மறைந்து நிற்பப் பொருள்தரும் இயல்பினது. இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை முடிய உள்ள ஆறு வேற்றுமை உருபுகள் மறைந்து நிற்பச் சொற்கள் நின்று பொருள்தரின் அவை வேற்றுமைத்தொகைகள் எனப்படும்.

*(எ-டு)* நிலம் கடந்தான் - இரண்டாம் வேற்றுமைத் தொகை. நிலத்தைக் கடந்தான் - இரண்டாம் வேற்றுமை விரி. (தொகாநிலை)

'ஐ' என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு முன்னதில்

மறைந்து நிற்பதால் இரண்டாம் வேற்றுமைத் தொகையாயிற்று.

தாய்மூவர் - மூன்றாம் வேற்றுமைத்தொகை

தாயொடுமூவர் என விரியும்போது ‘ஒடு’ என்னும் மூன்றன் உருபு விரிந்துநின்றது.

பொற்குடம் - 'ஆல்' என்னும் மூன்றாம் வேற்றுமை உருபு மறைந்து நிற்பதால் மூன்றாம் வேற்றுமைத்தொகை. (ஆல் என்பது மூன்றன் உருபு) பொன்னால் செய்த குடம் என விரியும். கரும்புவேலி - இது கரும்புக்கு வேலி என விரியும். 'கு' என்னும் நான்கின் உருபு மறைந்து நிற்பதால் இது நான்காம் வேற்றுமைத்தொகை ஆகும்.

கருவூர்க்கிழக்கு - இது கருவூரின் கிழக்கு என விரியும் 'இன்' என்னும் ஐந்தன் உருபு மறைந்து நிற்பதால் ஐந்தாம் வேற்றுமைத்தொகை

சாத்தன்புத்தகம் - இது சாத்தனது புத்தகம் என விரியும். 'அது' என்னும் ஆறன் உருபு மறைந்து நிற்பதால் ஆறாம் வேற்றுமைத்தொகை.

மன்றப்பலா - இது மன்றத்தின்கண் பலா என விரியும். 'கண்' என்னும் ஏழன் உருபு தொக்கு நிற்பதால் ஏழாம் வேற்றுமைத்தொகை ஆகும். முதல்வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபுகள் இல்லை.

கந்தன் வந்தான் - முதல்வேற்றுமை (கருத்தா)

கந்தா வா - எட்டாம் வேற்றுமை (விளி) இவற்றில் உருபுகள் மறையவில்லை. முதல்வாக்கியம் எழுவாய் வேற்றுமை எனவும். இரண்டாம் வாக்கியம் விளிவேற்றுமை எனவும் படும்.

## சூத்திரம் 414

*(உவத்தொகை)*

*உவமத்தொகையே உவம இயல*

*(பொ-ரை)* உவமத்தொகை என்பது உவமஉருபு தொடர்ப்பொருள் போலப் பொருளுணர்த்தும். போல, ஒப்ப, அன்ன முதலிய உவம உருபுகள் மறைந்து நிற்க வருவனவெல்லாம் உவமத்தொகைகளாம்.

*(எடு)* துடி இடை - துடி போன்ற இடை

மழை வண்கை - மழை அன்ன வளமுடைய கை - இவற்றில் போன்ற, அன்ன என்ற உவம உருபுகள் தொக்கு நின்றன. உவம உருபுகள் தொக்கிவருவன உவமத்தொகைகள்.

## சூத்திரம் 415

*(வினைத்தொகை)*

*வினையின் தொகுதி காலத்து இயலும்*

*(பொ-ரை)* வினைத்தொகை என்பது காலம்காட்டும் இடைநிலைகள் மறைந்து நிற்ப வருவதாம்

ஊறுகாய் - இத்தொகை ஊறின காய், ஊறுகின்றகாய், ஊறும் காய் என முக்காலமும் காட்டும். ஆனால் காலங்காட்டும் இடைநிலைகளாகிய கின், கின்று, என்னும் இடைநிலைகளும் 'உம்' என்னும் விகுதியும் தொக்கு நின்றன. வினைப்பகுதி பெயரெச்சம் போல் நிற்கும் 'காலம் கரந்த (மறைந்த) பெயரெச்சம் வினைத்தொகை' என்பது நன்னூல் சூத்திரம்.

## சூத்திரம் 416

*(பண்புத்தொகை)*

*வண்ணத்தின் வடிவின் அளவின் சுவையினென்று*
*அன்னபிறவும் அதன்குணம் நுதலி*

*இன்னது இதுவென வரூஉம் இயற்கை*
*என்ன கிளவியும் பண்பின் தொகையே*

*(பொ-ரை)* வண்ணம் (நிறம்), வடிவம், அளவு, சுவை என்பனவும் அவை போன்ற பிறவும் ஆகிய குணங்களைக் குறித்துப் பின்பு தொக்குவரும்போது (பண்புருகள் மறைந்துவரும்போது) குணத்தை உணர்த்துவதால் இன்னது இது என்று ஒன்றை ஒன்று விசேடித்து இரு சொற்களும் ஒரு பொருளே குறித்து வரும் இயல்புடைய எல்லாத் தொகைகளும் பண்புத்தொகைகளாம்.

*(எடு)* கருங்குதிரை (கருமை ஆகிய குதிரை) - நிறம்
வட்டப் பலகை (வட்டவடிவமான பலகை) - வடிவம்
நெடுங்கோல் (நெடுமையாகிய கோல்) - அளவு
தீங்கரும்பு (இனிமையாகிய கரும்பு) - சுவை - இவற்றுள் ஆகிய என்னும் பண்பு சுட்டும் 'உருபுகள்' மறைந்து (தொக்கு) நிற்பதால் இவை பண்புத்தொகைகளாம்.

## சூத்திரம் 417

*(உம்மைத்தொகை)*

*இருபெயர் பல்பெயர் அளவின் பெயரே*
*எண்ணியல் பெயரே நிறைப்பெயர்க் கிளவி*
*எண்ணின் பெயரொடு அவ்வறு கிளவியும்*
*கண்ணிய நிலைத்தே உம்மைத் தொகையே*

*(பொ-ரை)* இரண்டு பெயர்கள், பலபெயர்கள், அளவுப்பெயர்கள், எண்ணியல் பெயர்கள், நிறைவைப்பெயர்கள், எண்ணுப்பெயர்கள் என்னும் அறுவகைச் சொற்சேர்க்கைகளையும் தனக்குச் சார்பாகப் பெற்றுவரும் உம்மைத்தொகை.

ஊடல் கூடல் (இருபெயர்கள்) - ஊடலும் கூடலும் (உம் - தொக்கது)

புலிவில் கெண்டை (பல பெயர்கள்) - புலியும், வில்லும் கெண்டையும் (மீன்) - உம் தொக்கியது.

தூணிப் பதக்கு (முகத்தலளவை) - தூணியும் பதக்கும் என விரியும்

முப்பத்து மூவர் (எண்ணியல்) - முப்பத்து மூன்று பேர் (33) (முப்பதும் மூவரும் என விரியும்)

தொடியரை (தொடியும் அரையும் (கஃசும்) - நிறுத்தல் அளவு

பதினைந்து (எண்ணுப்பெயர்) பத்தும் ஐந்தும் எனவிரியும். - இவ்வாறு உம்மைத்தொகை அறுவகையாக வரும்.

இரவு பகல் (இரவும், பகலும்) என்பதும் உம்மைத்தொகையே.

## சூத்திரம் 418

*(அன்மொழித்தொகை)*

*பண்புதொக வருஉம் கிளவி யானும்*
*உம்மை தொக்க பெயர்வயி னானும்*
*வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்*
*ஈற்றுநின் றியலும் அன்மொழித் தொகையே*

*(பொ-ரை)* பண்புத்தொகை, உம்மைத்தொகை, வேற்றுமைத்தொகை ஆகிய மூன்று தொகைச் சொற்களையும் இடமாகப்பெற்று அன்மொழித்தொகை பிறக்கும். அன்மொழி - அல்+மொழி ; அஃதாவது தொடரின் கண் இல்லாத ஒரு சொல் தொக்கி நிற்கும். இவ்வன்மொழித்தொகை பிற தொகைகளை நிலைக்களமாகப் பெற்றே தோன்றும். தனியாக அன்மொழி பிறக்காது.

இவை முறையே பண்புத்தொகையிடத்துப் பிறந்த அன்மொழித்தொகை, உம்மைத் தொகையிடத்துப் பிறந்த

அன்மொழித்தொகை. வேற்றுமைத்தொகையிடத்துப் பிறந்த அன்மொழித் தொகை என விரித்துப் பேசப்படும்.

இவையே அன்றி வினைத்தொகை, உவமைத்தொகை ஆகியவற்றைச் சார்ந்தும் அன்மொழி பிறக்கும். "ஐந்தொகைமேல் பிறதொகல் அன்மொழி" என்பது நன்னூல்.

(எடு) வெள்ளாடை - (வெண்மை ஆகிய ஆடை) இது

1. பண்புத்தொகை. வெள்ளாடை வந்தாள் - இது வெள்ளாடை உடுத்த பெண் வந்தாள் என விரியும் வந்தாள் என்னும் வினைமுற்றால் 'பெண்' என்பது பெறப்பட்டது. இத்தொடரில் 'பெண்' என்னும் சொல் தொக்கு நின்றது. இதனைப் பண்புத்தொகையிடத்துப் பிறந்த அன்மொழித் தொகை எனல் வேண்டும்

அகர ஈறு - என்பதும் அகரமாகிய ஈற்றெழுத்தை உடைய சொல் என விரிந்து, பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழி எனப்படும்.

2. தகர ஞாழல் - இது தகரமும், ஞாழமும் என விரியும் இஃது உம்மைத்தொகை. தகரம் - வாசனைப் பண்டம்; ஞாழல் - குங்கும மரம். இவை இரண்டும் கலந்து செய்யப்பெற்ற சாந்து. தகர ஞாழல் கொண்டு வந்தான் - இத்தொடர் தகரத்தாலும் ஞாழலாலும் ஆக்கப் பெற்ற சாந்தினைக் கொண்டுவந்தான் என விரிந்து உம்மைத் தொகையிடத்துப் பிறந்த அன்மொழித்தொகை ஆகும். இங்குச் சாந்து என்பது தொக்கது.

3. பொற்றொடி - (பொன்+தொடி) பொன்னால் ஆகிய வளையல் பொற்றொடி ஆடினாள். - இத்தொடர் பெண் பொன்னால் ஆகிய வளையலை அணிந்த ஆடினாள் என விரியும். 'பெண்' என்பது தொக்கு நின்றது.

எனவே, வேற்றுமைத்தொகை இடத்துப்பிறந்த அன்மொழித் தொகை. 'ஆல்' என்பது மூன்றன் உருபு.

இனி, இங்குச் சூத்திரத்தில் குறிக்கப்படாத உவமத்தொகை, வினைத்தொகை ஆகியவற்றின் அடிப்படையிலும் அன்மொழி தோன்றும் என்பது உரையாசிரியர்களின் உரையால் பெறப்படுகிறது.

4) துடி இடை - துடிபோன்ற இடை (உவமை) - துடி இடை பாடினாள் - துடிபோலும் இடையை உடையவள் பாடினாள் என விரிவதால், உவமத்தொகை அடிப்படையில் பிறந்த அன்மொழித்தொகை இது.

5) சுருள்தாடி - சுருண்டதாடி, சுருளுகின்ற தாடி, இனிச்சுருளும்தாடி என விரிந்து காலம் காட்டும். இவ்வாறு வருவது வினைத்தொகை. - இங்குச் சுருள்தாடி உடையான் என விரிந்து அன்மொழித்தொகை ஆயிற்று.

குறிப்பு ; தொல்காப்பியர் மூன்றுதொகைகளின் அடிப்படையில் அன்மொழித்தொகைதோன்றும் என்றார்; நன்னூலார் (பவணந்தியார்) ஐந்துதொகைகளின் வழியாகவும் அன்மொழி பிறக்கும் என விரித்தனர்.

## சூத்திரம் 419

*அவைதாம்*
*முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலும்*
*இருமொழி மேலும் ஒருங்குடன் நிலையலும்*
*அம்மொழி நிலையாது அன்மொழி நிலையலும்*
*அந்நான்கு என்ப பொருள்நிலை மரபே.*

*(பொ-ரை)* இச்சூத்திரம் தொகைமொழித்தொடர்களில் எங்கும் பொருள் நிற்கும் என்பதைக் கூறும். ஒரு தொகைமொழியில் முதலில் உள்ள சொல்லின் மீது

பொருள் நிற்றலும், அன்றிப் பின்னுள்ள சொல்லில் பொருள்நிற்றலும், இவ்வாறு அன்றி முன்பின் ஆகிய ஈரிடத்தும் பொருள் நிலைபெறுதலும் இம்மூவகையும் அல்லாத பிற சொல்லின் மேல் நிற்றலும் எனச்சொற்களில் பொருள் நின்று சிறக்கும் வகையைக் குறிக்கிறது இச்சூத்திரம்.

*(எடு)* வேங்கைப்பூ - இதில் பூ என்னும் முன் மொழிமேல் பொருள் நின்றது. முன் என்பது இடத்தால் முன் எனக்கொள்க.

அடைகடல் - இதில் அடை என்னும் பின்மொழிமேல் பொருள் நின்றது. அடை என்பது கடலை அடுத்த இடம்.

உவாப் பதினான்கு - இருமொழி (முன்பின்) மேலும் பொருள் நின்றது.

வெள்ளாடை - இதில் வெண்மை, ஆடை என்ற இருமொழிமேலும் நில்லாமல், உடுத்தாள் (பெயர்) என்னும் அன்மொழி (இங்கு இல்லாத மொழி) மேல் பொருள் நின்றது. (நிற்றல் - சிறந்து நிற்றல்).

## சூத்திரம் 420

*எல்லாத் தொகையும் ஒரு சொல் நடைய*

*(பொ-ரை)* ஆறுவகையாக மேலே கூறப்பட்ட தொகைச் சொற்களும் ஒரு சொல்லாய் நிற்கும் என்பதாம்.

*(எடு)* யானைக்கொம்பு, ஆடு, பாம்பு - இவை ஒவ்வொன்றும் இருசொற்களையுடையதாயினும் வழக்கில் ஒருசொல் போல் கொள்ளத்தக்கவை முன்னது கொம்பையும், பின்னது பாம்பின் ஆற்றலையும் குறித்தன.

*(தொடரும்)*

# திருவிளையாடற்புராணச் சிறப்பு

*- பேரறிஞர் மு.அருணகிரி*

மதுரை மாநகருக்கு பல்வேறு சிறப்புகள் உண்டு. நாளும் விழாக்கோலம் கொள்ளும் இம்மதுரையில்தான் முழுமுதற்கடவுளாம் சிவபெருமான் சோமசுந்தரராக வந்து மீனாட்சியம்மையை மணம்புரிந்து 64 திருவிளையாடல்களை நிகழ்த்திக்காட்டினார். இத்திருவிளையாடல்களைப் பற்றிப் பல்வேறு நூல்கள் வந்திருப்பினும், பரஞ்சோதி முனிவர் அருளிய "திருவிளையாடற் புராணமே" சிறப்புடைத்து. இவர்தம் மொழியில் தமிழ்மணமும், சிவமணமும் கமழ்ந்துகொண்டிருக்கிறது.

மூன்று காண்டங்களாக - மதுரைக் காண்டம், கூடற்காண்டம், ஆலவாய்க் காண்டம் - அமைந்துள்ள இப்புராணத்தில் சங்கத்தார் கலகம் தீர்த்த படலம், இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம், வலைவீசின படலம் எனும் முப்படலங்களின் சிறப்புக்களை ஈண்டுக் காணலாம்.

*படலச்சுருக்கம்*

## சங்கத்தார் கலகம் தீர்த்த படலம்

மதுரை மாநகரத்தின் பல்வேறு சிறப்புகளில் ஒன்று சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த பான்மையாகும். இங்குத் தோன்றிய சங்கம் கடைச்சங்கமாகும். இச்சங்கத்திலிருந்த 48 புலவர்களும் பாக்கள் புனைவதில் வல்லவராயினும், தம் திறமைச் செருக்கினால் தங்களுக்குள் மாறுபட்டு இருந்தனர். தம்முள் எவர் சிறந்தவர் என்பதையறிய சுந்தரேசப் பெருமானிடம் சென்று முறையிட, புலவர் வடிவில் வந்த இறைவன் தீர்வு ஒன்றைக் காட்டினான். மதுரை மாநகரில் வணிகர் குலத்தில் தோன்றிய ஊமைச்சிறுவன் ஒருவனிடம் புலவர்கள் தத்தம் பாடல்களைப் பாடிக்காட்டவேண்டும், அவன்

புத்திக்கு இசைந்த பாடல் எதுவோ, அதுவே அனைவராலும் மதிக்கப்படவேண்டிய பாடல் என்பது வாக்கு.

இதற்கு ஏற்ப ஊமை வணிகச் சிறுவனிடம் புலவர்கள் தம் பாடல்களைப் பாடிக் காட்டியபொழுது, நக்கீரர், கபிலர், பரணர் எனும் மூவர் பாடல்களை மட்டுமே அச்சிறுவன் தலை அசைத்து ஒப்புதல் அளித்தமையால் இவர்களே சிறந்தவர்களென மற்ற புலவர்களும் ஒப்புக்கொண்டு தம்மிடையே ஏற்பட்ட கலகத்தைப் போக்கிக் கொண்டனர்.

## இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம்

கல்வியில் சிறந்த குசேலபாண்டியன் எனும் மன்னன் மதுரை நகரை ஆண்டுவந்தபொழுது, இடைக்காடன் என்னும் புலவன் பிரபந்தம் ஒன்றை இயற்றி அரசனிடம் காட்டிச் சிறப்புப் பெற்றுவரச் சென்றபொழுது அரசன் புலவரைச் சரியாக மதிக்காததால் பிணக்குக் கொண்ட புலவன் சோமசுந்தரக் கடவுளிடம் முறையிட்டான். புலவனின் சிறப்பை மன்னனுக்கு உணர்த்த விரும்பிய இறைவன் திருக்கோயிலினின்று நீங்கி வையைத் தென்பகுதியில் தனியே ஒரு கோயில் அமைத்து எழுந்தருளினான். இறைவனில்லா மதுரைத் திருக்கோயில் பொலிவிழக்க, செய்தியறிந்த மன்னன் புலம்பி அழுது தென்கரையில் புதிதாக அமைந்திருக்கும் கோயிலில் இறைவனைக் கண்டு போற்றினான். அந்நிலையில் அசரீரியாக இடைக்காடன் பாடல் சிறப்பும் அவனுக்கு ஏற்பட்ட பிணக்கினால் இறைவன் கோயிலிலிருந்து நீங்கிய நிலைபற்றிய செய்தியும் கேட்க, குசேல மன்னன் இடைக்காடன் பாடலுக்குச் சிறப்புச் செய்தான்.

## வலை வீசின படலம் ;

வேதத்தின் உட்பொருளை அம்மைக்கு இறைவன் உணர்த்த விரும்பிய பொழுது அம்மை அதனைச் சற்றே பாராமுகமாகக் கேட்டாள் அதனால் மனம் வருந்திய இறைவன், விருப்பமின்றிக் கேட்ட குற்றத்திற்காக இழிந்த பரதவர்குலப் பெண்ணாகப் பிறக்கச் சாபமிட்டான். சாபநீக்கம்பற்றிக் கேட்ட அம்மைக்கு வலையர்குலப்

பெண்ணாக வளர்ந்துவரும் சூழலில், தாம் வந்து மணம் முடிப்பதாகக் கூறினான். பரதவமன்னன் ஒருவன் ஊழ்வினை வயத்தால் அக்குலத்திலே பிறந்து மகப்பேறின்றி வருந்திய நிலையில் கடற்கரை ஓரத்தில் இறைவன் அருளால் பெண்குழந்தையாகத் தோன்றியிருந்த மகவைக் கையிலெடுத்து மகிழ்ந்தான். அப்பெண்குழந்தையும், அச்சேரியில் வளர்ந்து வந்தாள். அந்நிலையில் இறைவன் பணிப்புக்கு ஏற்ப நந்திதேவர் சுறாமீனாக உருவெடுத்துக் கடலில் தோன்றினார். அச்சுறாமீன் கடல்வாழ் உயிரினங்களுக்கு மட்டுமின்றி, பரதவர்களுக்கும் மீன்பிடிக்கச் செல்லவிடாதும், அவர்தம் வலைகளை அறுத்தும் துன்பம் ஏற்படுத்தியது. எவராலும் சுறாவைப் பிடிக்க முடியாத நிலையில் அந்நாட்டரசன் தொல்லைதரும் சுறாவைப் பிடித்துக் கொல்வோருக்குத் தன் மகளை மணம்முடிப்பதாக அறிவித்தான். உரிய காலம் வந்தமையால் இறைவன் வலைஞனாக உருவெடுத்து அவர்முன் தோன்றி அச்சுறாவினைப் பிடித்துவருவதாகச்சொல்லிக் கடலுள் சென்று வலைவீசி அச்சுறாவினைப் பிடித்துவந்தான். உறுதியளித்தவாறே அக்கடற்கரைத்தலைவனும் தம் மகளை அவ்விளைஞனுக்கு மணமுடித்தநிலையில் சோமசுந்தரக்கடவுள் அம்மையோடு சேர்ந்து காட்சியளித்துப் பரவத மன்னனுக்குப் பல்வேறு பேறுகளை அளித்தார்.

## சிறப்புக்கள்

இம்மூன்று படலங்களிலும் காணப்படும் பல்வகையான சிறப்புக்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

## உவமைநலம்

பரஞ்சோதி முனிவர், சைவசமய நெறியில் தம் புராணத்தை அருளினாலும், தமிழ்மீது கொண்ட மாறாக் காதலினால், இலக்கியச்சுவை ததும்பப் பாடியுள்ளார் எனவே கொள்ளல் வேண்டும். அழகான உவமைகளை ஆங்காங்கே கையாண்டுள்ள பாங்கு மகிழ்தற்குரியது.

## அ) நுண்பொருளுக்குப் பருப்பொருளை உவமைகாட்டல்.

ஊமை வணிகச்சிறுவன் சங்கத்தார் கலகத்தைத் தீர்த்த செயலை உவமை மூலம் விளக்குவார் பரஞ்சோதியார். வணிகர்கள் ரத்தினங்களையும், பவளங்களையும், முத்துக்களையும் அளக்க துலாக்கோலைப் பயன்படுத்துவர். அதுபோல வணிகர் குலச்சிறுவனான இவனும் பாடல்களின் சொல் ஆழத்தையும், பொருள் ஆழத்தையும், தன் நாவையே துலாக்கோலாகக் கொண்டு அளந்தான் எனப் பாடுவான். வணிகர்கள் பயன்படுத்தும் தராசினையே இங்கு உவமையாகப் பயன்படுத்தியிருப்பது தனிச்சிறப்பு.

*"பல்காசொடு கடலிற்படு பவளஞ்சுடர் தரளம்*
*எல்லாநிறுத் தளப்பானென வியல்வாணிகக் குமரன்*
*சொல்லாழமும் பொருளாழமுந் துலைநாவெனத் தூக்க"*

என நாவுக்குத் துலாக்கோலை உவமையாக்கியிருப்பதைக் காணலாம்.

## ஆ) உயர்ந்த பொருளுக்கு இழிந்த பொருளை உவமையாக்கல்

இடைக்காடன் பாடலைக் கண்டு கொள்ளாத குசேலபாண்டியனை அஃறிணைப் பொருளாக உவமித்துள்ளார் பரஞ்சோதியார். கடலும் மிருகமும், பரவையும் மலையும், பாலையும் புலவர்களின் பெருமையை அறியாதிருப்பதுபோல அரசனும் ஒரு அஃறிணைப் பொருளாக இருந்தான் என்பதை,

*"பரிவாயின் மொழிதொடுத்து வருணித்தோர்க்கு*
*அகமகிழ்ந்து ஓர் பயனும் நல்கார்*
*விரிவாய தடங்கடலே நெடுங்கழியே அடுங்கான*
*விலங்கே புள்ளே*
*பொரிவாய பராரை மர நிரையேவான்*
*தொடுகுடுமி பொருப்பே வெம்பும்*
*எரிவாய கொடுஞ்சுரமே என இவற்றோர்*
*அஃறிணை ஒத்து இருந்தான்"*

என்பார். உயர்ந்த பொருளைத் தாழ்ந்த பொருளோடும் உவமிக்கலாம் என்ற தொல்காப்பிய விதிக்கேற்ப, அரசன் அஃறிணைப்

பொருள்களோடு உவமிக்கப் பெற்றுள்ளான்.

## இ) ஒரு பொருளுக்குப் பல பொருள்களை உவமையாக்கல்

இடைக்காடனுக்காக மதுரைத் திருக்கோயிலைவிட்டு வையைத் தென்கரைக்கு இறைவன் சென்றமையால் மதுரைநகர் பொலிவிழந்தது. இக்காட்சி, உயிர்க்காதலரைப்பிரிந்து வாழும் பெண்களைப் போலவும், இலக்குமியை நீத்த தாமரை மலர் போலவும் இருந்ததாகக் காட்டுவார்.

*"அன்னவரைப் பிரிந்துரையும் அணங்கனையர்*
*எனவும் மலர் அணங்கு நீத்த*
*பொன்னவிர் தாமரை எனவும் புலம்படைந்து*
*பொலிவிழந்த புரம்"* *(இடை: பாடல் 19)*

இங்கு புலம்புதல், பொலிவு அழிதல் எனும் இருகாட்சிகள் ஒருபொருளுக்கு உவமையாக்கப்பட்டிருக்கின்றன. புலம்புதல் மனதிற்குள் நிகழும் நிகழ்வு ; பொலிவு அழிதல் புறத்தே நிகழும் அழகிழப்பு. இவ்வாறு மதுரை நகர் அகத்தேயும், புறத்தேயும் பொலிவற்று இருந்தது எனக் காட்டியிருக்கும் நயம் நோக்கத்தக்கது.

## ஈ) இயற்கைக்காட்சியை வருணித்தல்

வலைவீசிய படலத்தில், நெய்தல் நிலத்தை உவமை தோன்ற வர்ணித்துள்ளார். கடற்கரையில் இருக்கும் தாழை முள் இலைகளால் மூடப்பட்ட மலர்களோடு காற்றில் வளைந்து அசையும். இக்காட்சி, கையில் ஏந்திய கேடயத்துடன் வாளை அசைத்துப் போர்செய்யும் வீரர்களை ஒத்திருந்ததாகக் கூறுவார். இங்குத் தாழையைப் போர்வீரனாகவும், முள்இலையைக் கேடயமாகவும், மலரை வாளாகவும் உவமித்துள்ளார்

## உ) இல்பொருள் உவமை

சிவபெருமான் சடைமுடி தரித்தவர் என்பதற்கு "மின் திரித்தன்ன வேணி" - மின்னலைத் திருகிவைத்தாற்போன்ற சடைமுடி என்று உவமை காட்டுவது இல்பொருள் உவமையாகும்.

## 2. முன்னோர் மொழியும் பொருளும் போற்றல்

திருவிளையாடற்புராணத்தில் பரஞ்சோதியார் சில அரிய சொற்களைப் பயன்படுத்தியுள்ள சிறப்பைக் காணலாம். சங்கப்புலவர் பிணக்குத் தீர்த்த நிலையில் "தங்கள் கலகமா நவையில் தீர்ந்து காசறு பனுவல் ஆய்ந்து புலமிகு கோட்டி செய்து பொழிந்தனர் இருந்தார்" எனக்கூறும்போது கோட்டி என்ற அரிய சொல்லைப் பயன்படுத்துகிறார். இங்கு, 'கோட்டி' என்பதற்கு அறிவால் மிக்க வாதம் என்பது பொருளாகும். இச்சொல்லை,

*"அரங்குஇன்றி வட்டுஆடி அற்றே நிரம்பிய*
*நூல்இன்றிக் கோட்டி கொளல்"* (401)

எனும் திருக்குறளிலிருந்து ஆண்டுள்ளார். இங்குக் கோட்டி என்பதன் பொருள் 'சொல்' என்பதாகும். ஆனால் இது ஆகுபெயராகப் பொருளைக் குறிக்கிறது எனப் பரிமேலழகர் கூறுவார். இதேபோன்று "புல்லா எழுத்தின் பொருளில் வறுங்கோட்டி" என்று நாலடியாரிலும் (155,260,312) கோட்டி எனும் சொல்லாட்சியைக் காணலாம்.

இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலத்தில் 'சோத்தம்' என்ற அரிய சொல்லாட்சியைக் காணலாம். திருக்கோயிலை விட்டு நீங்கி வையைத் தென்கரையில் தனிக்கோயில் அமைத்து இருந்தபோது குலேசபாண்டியன் பல்வேறு விதமாகப் 'போற்றி' செய்கிறான். அந்நிலையில் இறைவன் "உன்னது சோத்தம் நாம் கேட்டு வந்தனம்" என அசரீரியாகக் கூறுவார். இங்கு சோத்தம் என்பது இழிந்தோர் செய்யும் அஞ்சலியைக் குறிக்கும். இதனைப் பேராசிரியர் திருக்கோவையார் உரையில் காணலாம். திருவாசகம் 'ஆசைப்பத்தில்' மணிவாசகர் "துயர் உறுகின்றேன் சோத்தம் எம்பெருமானே" ('ஆசைப்பத்து' பாடல் 4) எனக் கையாள்வார். சோத்தம் என்பது வணக்கம் எனும் பொருளுடையதாக அமையும். தோத்திரம் என்பது சோத்தம் என மக்கள் வழக்கில் மாறி வழங்கியிருக்கலாம்.

வலைவீசின படலத்தில் "தனிவலை உழவன்" (பாடல் எண்-50) என வலைஞரைக் குறிப்பிடுவார். சொல்லேர் உழவன் எனபது சொல்லை ஏராகக்கொண்டு உழுது இலக்கியம் படைக்கும்

புலவரைக்குறிப்பதுபோல, வலையைக்கொண்டு கடலில் மீன் பிடிக்கும் பரதவரைக் குறிக்கும் சொல்லாகத் "தனிவலை உழவன்" எனச் சொல்லாட்சி அமைகிறது.

சங்க இலக்கியத்தில் தோய்வு கொண்டவர் பரஞ்சோதியார் என்பதைத் "திரிமருப்பு இரலை" (இடைக்காடன் : 38) என்ற சொல்லாட்சி காட்டும்.

பரஞ்சோதி முனிவர் பன்னிரு திருமுறைகளில் ஆழ்ந்த பிடிப்புக்கொண்டவர். பெரியபுராணத்தின் மீதும் திருவாசகத்தின் மீதும் அளவற்ற ஈடுபாடு கொண்டவர்.

சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில், அடியார் ஒருவரின் வரலாற்றை முடிக்கும்போது அடுத்துக் கூறஇருக்கும் அடியாரைப்பற்றியும் குறிப்பிட்டே முடிப்பார். இம்முறையைப் பின்பற்றியே பரஞ்சோதியாரும் படலத்தின் முதல்பாடலை முந்தைய படலத்தில் சொன்ன செய்தியையும், அப்படலத்தில் சொல்லவிருக்கும் செய்தியையும் குறிப்பிடுவார்.

வலைவீசிய படலத்தில், இறைவன் அம்மைக்கு வேதத்தின் பொருளைக்கூற முற்பட்டபொழுது, அம்மை பாராமுகமாக இருந்து கேட்டதைப் பரஞ்சோதியார் "யாது காரணத்தால் மன்னோ அருகிலேம்" என்பார். சேக்கிழார் பெருமானும் ஞானசம்பந்தரின் வரலாறு கூறும்பொழுது இம்முறையைப் பின்பற்றியிருப்பதைக் காணலாம்.

*"மெய்ம்மேல் கண்துளி பனிப்ப, வேறுஎங்கும் பார்த்து அழுவார்*
*தம்மேலைச் சார்பு உணர்ந்தோ சாரும் பிள்ளைமை தானோ*
*செம்மேனி வெண்ணீற்றார் திருத்தோணி சிகரம் பார்த்து*
*அம்மே அப்பா என்று என்று அழைத்தருளி அழுதருள"*
*(பெரிய புராணம் சம்பந்தர் 63)*

யாது காரணத்தால் மன்னோ என்பதும், தம் மேலைச்சார்பு உணர்ந்தோ என்பதும் கவிக்கூற்றுக்களாகவே அமைந்திருப்பதும் சிறப்புடைத்து.

சிவனும், சக்தியும் இணைந்து காட்சி தந்தமையால் பரதவகுல மன்னனுக்கு முன்வினைச் சார்பினால் உண்டான இப்பிறவியின் சிற்றறிவு அழிந்து நல்லறிவு தோன்றியதாகப் பரஞ்சோதியார் காட்டுவார்

இறைவனின் திருக்கருணையால், பிறவிச்சார்பு நீங்குவதைக் கண்ணப்பநாயனார் புராணத்தில்,

*"அங்கணர் கருணை கூர்ந்த அருட்டிரு நோக்கம் எய்தித்*
*தங்கிய பவத்தின் முன்னைச் சார்பு விட்டகல"*

எனச் சேக்கிழார் கூறுவது ஒப்புநோக்கத்தக்கது.

நாட்டை ஆளும் மன்னன் தன் குடிமக்களைப் பாதுகாக்கும் கடமையுடையவன். காவலன் போன்று இருப்பவன். அவன் தன்னாலும், தன் பரிவாரத்தாலும், பகைவராலும், கள்வராலும், விலங்கு முதலிய உயிர்களாலும் மக்களுக்குத் துன்பம் வராமல் காப்பவன் என்பதை,

*"மாநிலம் காவலன் ஆவான் மண்உயிர் காக்கும் காலைத்*
*தான் அதனுக்கு இடையூறு தன்னால், தன் பரிசனத்தால்*
*ஊனம்மிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்கள் தம்மால்*
*ஆனபயம் ஐந்தும் தீர்த்து அறம்காப்பான் அல்லனோ"*

*(பெரிய புராணம், திருநகரம் 36)*

என்று சேக்கிழார் கூறுவதையே பரஞ்சோதியார் குலேசபாண்டிய மன்னன் கூற்றாகப் பின்வருமாறு பாடுகின்றார்.

*"அல்லதை என்தமரால் என்பகைஞரால் கள்வரால்*
*அரியகானத்து*
*எல்லை விலங்கு ஆதிகளால் இடையூறு இன் தமிழ்நாட்டில்*
*எய்திற்றாலோ"* (இடை. 20)

குலேசபாண்டியன் தான் செய்த தவறை இறைவன் பொறுத்தருள வேண்டும்போது "சிறியோர் குற்றம் பொறுப்பது பெருமையன்றோ எண்ணிய பெரியோர்க்கு" என்பான். "வெறுப்பனவே செய்யுமென் சிறுமையை நின் பெருமையினால்

பொறுப்பவனே" (அடைக்கலப் பத்து 2) "பொறுப்பரன்றே பெரியோர் சிறுநாய்கடம் பொய்யினையே" (திருவாசகம்) என வரும் திருவாசக அடிகளிலிருந்தே பரஞ்சோதியார் இக்கருத்தை எடுத்தாண்டுள்ளார் எனலாம்

இதேபோன்று."எரிமருத்து அவனி முன்னாம் எண்வகை மூர்த்தி" எனும் திருவிளையாடற் புராண அடிகள். "நிலம் நீர் நெருப்பு உயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன் புலனாய மைந்தனோடு எண்வகையாய்ப் புணர்ந்து நிற்பான்" எனும் திருவாசக அடிகளை ஒத்து அமைந்திருப்பதை அறியலாம்.

இத்தகைய சான்றுகளால் பரஞ்சோதியார் தன் முன்னோர் மொழியையும். பொருளையும் பொன்னேபோல் போற்றுபவர் என்பது புலனாம்.

## 3. சைவசித்தாந்தக் கருத்துக்கள்

சைவ சமயத்தின் சிறப்பை விளக்க வந்த திருவிளையாடற்புராணத்தில். அக்கருத்துக்கள் மலிந்து கிடப்பதில் வியப்பில்லை.

இறைவனை எண்குணத்தான் எனச் சித்தாந்தம் கூறும். எண்குணங்களுள் ஒன்று இறைவன் முற்றறிவு உடையவன் என்பது. உயிர்கள் எல்லாம் சிற்றறிவு உடையவையே. அதுவும் உணர்த்த உணரும் அறிவுடையவை. இதனை"முழுது ஒருங்கு உணர்ந்த வேத முதல்வன்"(ச.க.ப. எண்3) என்பார்.

இறைவன் சச்சிதானந்த வடிவினன். இதனை.

*"இருவரும் துருவ நீண்ட எரியழல் தூணில் தோன்றும்*
*உருவென அறிவானந்த உண்மையாய் உலகுக்கெல்லா"*

*(பாடல் எண்.4)* என்ற பாடலில் விளக்குவார். சிவஞானபோதம் ஆறாம் நூற்பாவில் பதியின் உண்மை இயல்பை. "சத்தாய் உள்ள சிவம்" என்பார் ஆசிரியர். சத்தாய் இருக்கும் சிவம். சித்தாகவும் இருப்பது உண்மையாதலால். சச்சிதானந்த வடிவமான இறைவனின்

சொரூப லக்கனம் இப்பாடலில் கூறப்பட்டிருப்பதை அறியலாம்..

உயிர்கள் பாசத்தோடு கலந்து இருப்பது இயல்பு. அதிலும் ஆணவமலம் உயிர்களோடு அநாதி காலம் தொட்டே சேர்ந்தே வருகின்ற இயல்புடைத்து என்பதையும். இந்நிலையில் உலக உயிர்கள் இறைவனை அடைவதையே நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதையும் இங்குக் காணலாம்.

வீடுபேறு எனும் முக்தி. ஞானத்தால்தான் விளையும். இதனைப் பரஞ்சோதியார் "சிற்றறிவு ஒழிந்து முந்நீர்ச் சேர்ப்பன் நல்லறிவு தோன்ற" (சிற்றறிவினின்று நீங்கி நல் உணர்வு உதிக்க) என்று ஞானத்தின் சிறப்பைக் காட்டுவார். (வலை பாடல் எண்.59)

இறைவன் உயிர்களுக்குப் பாசநீக்கம் செய்யப் பல வழிகளைக் காட்டுவான். தாமே மனித வடிவில் தோன்றி உயிர்களுக்கு ஞானம் அளிப்பான். இதனையே "ஏழையோனைப் புரக்க இன்று என்போல் வந்த புண்ணிய வடிவம் போற்று" எனக் காட்டுவார். (வலை-60).

இரு வினைகளுக்கு ஏற்பப் பிறவிகள் அமையும் என்பது சைவசித்தாந்தக் கருத்து. நல்வினையின் மிகுதிப்பாட்டால் நற்பிறவியும், தீவினையால் இழிபிறவியும் அமையும். பரதவர்குல மன்னனின் பிறப்புக்கு காரணமாக இதனையே பரஞ்சோதியார் சுட்டுவார். முற்பிறப்பில் செய்த பெருநதவத்தினால் தேவர்களினும் சிறந்தவனாய் கழிந்த பிறப்பில் சிறிது செய்த கொடிய தீவினையினால் தாழ்வான பரதவர் குலத்தில் பிறந்தானாம். இதனை.

*"மேல் ஆற்றிய தவத்தால்*<br>
*தூய வானவர் தம்மினும் தூயனாய்ச் சிறிது*<br>
*தீய தீவினைச் செய்தியால் திண்திமில் வானர்*<br>
*மேய சாதியில் பிறந்துளான் மேம்படு மனையான்"*

*(வலை எண் 20)*

என்பார்.

மீனாட்சி அம்மையைப் பரஞ்சோதியார் 'உலகம் ஈன்ற கன்னி' (வலை பாடல் எண்-2) என்பார். உலகத்தையே ஈன்றாலும் உமாதேவியார் என்றும் கன்னியாகவே இருப்பவள். இதனைச் 'சிவஞானசித்தியார்' விளக்கும். (சுபக்கம் பாடல் எண் - 167).

*"சிவம் சத்தி தன்னை ஈன்றும் சத்திதான் சிவத்தை ஈன்றும்*
*உவந்து இருவரும்புணர்ந்து இங்கு உலகு உயிர் எல்லாம் ஈன்றும்*
*பவன் பிரமசாரி ஆகும்; பான்மொழி கன்னி ஆகும்"*

இதன்பொருள்: சிவதத்துவத்திலிருந்து சக்தி தத்துவம் தோன்றும். அதிலிருந்து சதாசிவ தத்துவம் தோன்றும். இருவரும்கூடி உலக உயிர்களைத் தோற்றுவிப்பர். ஆயினும் சிவபெருமான் பிரமசாரியே ஆவான். சக்தி கன்னியே ஆவாள் இதனைத்தான் திருவிளையாடற் புராணமும் கூறுகிறது.

சொல்லின் வடிவமாக உமாதேவியும், அச்சொல்லின் பொருளாகச் சிவபெருமானும் இருப்பர் என்பதை,

*"சொல் வடிவாய்நின்*
*இடம் பிரியா இமையப் பாவை*
*தன்னையும் சொற்பொருளான உன்னையும்" (இடைபாடல்:10)*

எனச்சுட்டுவார்.

எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவன் குறிப்பாக எங்கு இருப்பான்? பசுவின் உடலெங்கும் பால் இருப்பினும், அதன் மடியில்தானே நிறைந்திருக்கிறது! இறைவன் இருக்குமிடம் மேரு மலையா? சிவபுரமா? வெள்ளிமலையா? அடியார் உள்ளக்கோயிலா? வேதங்களிலா? என வினவுவதிலிருந்து அடியார்களின் உள்ளத்தில் நீங்காது உறைபவன் என்பது பெறப்படும். (இடை. பாடல் எண்.16)

ஓர் உயிர் வினைவயத்தால் வெவ்வேறு உடலின்கண் புகுந்து உழலும் என்னும் கருத்தைப் பரஞ்சோதியார் பின்வருமாறு காட்டுவார். சுறா மீனைப் பிடிக்கப் பரதவ மன்னன் பல படகுகளில் ஏறிச்செல்வான். அவற்றையெல்லாம் சுறா மீன் உடைத்துவிடும். வெவ்வேறு கலங்களில் புகுந்து வலைவீசித் துன்பப்படுவதை

"வெவ்வேறு உடல்புகுந்து உழல் உயிர்" என்னும் சைவ சித்தாந்தக் கருத்தின் மூலம் விளக்குவார்.

சிவபெருமான் "நினைவுற்று அறிபவர்க்கு அரிதாம் பரம்பொருள்" ஆவார். இதனைச் சிவஞான சித்தியாரும் தன் அறிவு அதனால் காணும் தன்மையன் அல்லன் ஈசன் எனக்கூறும்.

உயிர்களிடம் இயல்பாக அமைந்திருக்கும் பாசங்களை நீக்க இறைவனின் அருள் தேவை என்பதை "என்பாசம் கரக்க வெள்விடைமேல் நின்ற கருணை" என்று குறிப்பிடுவார்.

பரதவ இளைஞனின் வலையில் சுறாமீன் அகப்பட்டது. அடியவர்களின் அன்பான வலையில் அகப்படுபவன் இறைவன் என்பதை உணர்த்தவல்லது.

## 4. சமுதாயச் சித்திரிப்பு

சமுதாயத்தைப் பிரதிபலித்துக் காட்டுவதே இலக்கியமாகும். 'திருவிளையாடற்புராணம்' சிவபெருமானின் திருவிளையாடல்களைக் கூறினாலும் அவ்வக்காலச் சமுதாய நிலையினையும், வாழ்க்கை முறையினையும், மரபுகளையும், நம்பிக்கைகளையும் தெளிவாகக்காட்டுகிறது எனலாம்.

புலவர்கள் புலமை மிக்கவர்கள், இலக்கியச் செருக்கு மிக்கவர்கள். அதனால் அவர்களிடையே புலமைச் சண்டை நிகழ்வது இயல்பான ஒன்றே.

நாட்டிற்கே தலைவன் அரசன். பொருளாதார நிலையில் தாழ்ந்தவன் புலவன். இருப்பினும் தன்னையும், தன் பாடலையும் மதிக்காத மன்னனை விட்டு விலகிச்செல்வது அப்புலவர்களின் இயல்பு.

தங்களுக்குள்ளே கலகமோ, பிணக்கோ ஏற்படும்போது இறைவனையே சரணடைவர்.

மன்னன் மாநிலம் காக்கும் தன்மையன். தன் குடிமக்களுக்கு ஏற்படும் இன்னல்களைத் தன் இன்னல்களாகக் கருதுபவன்.

எவ்வாறேனும் அவற்றை நீக்க முயல்பவன் - தன் மகளை மணமுடித்துக் கொடுத்தாவது.

ஆனால் மன்னன் புலவரின் பெருமையைக் கண்டு பொறுக்க முடியாத, பொறாமைக் குணம் கொண்டவனாகவும் இருந்திருக்கின்றான். (இடைப் பாடல் எண்-7)

இறைவனை வணங்குதல், அவனைச் சரணடைதல் அனைவரின் இயல்பாகும். அச்சூழலில் இறைவனைப் புகழ்ந்து போற்றுதல் மரபு. குசேலபாண்டியனின் போற்றிகள் இதனையே காட்டும்.

வலைவீசிய படலம் பரதவ சேரியின் அமைப்பினை, இயல்பினை, ஒழுகலாற்றினைச் சங்க இலக்கியம் போன்று, மிகச்சிறப்பாகக் கூறி, பரதவ சமுதாய நிலையை உணரவைக்கிறது.

*"கூற்றம் போன்ற கண்உளைச்சியர் குமுதவாய் திறந்து*
*மாற்றம் போக்கினர் பகர்தரும் கயற்கு நேர்மாறாம்*
*தோற்றம் போக்குவ அவர் விழித்துணைகளைக் கயல்மீன்*
*நாற்றம் போக்குவது அவர்குழல் நகைமலரக் கைதை"*
*(வலை எண்-18)*

அக்காலப் பெண்டிரும் கள் குடிப்பர் எனும் செய்தியை,

*"பனங்கள் வாய்மலர்ந்து அருந்திய குமுதமும்*
*மொய்ப்பன வண்டு"* *(வலை எண்-19)*

என்னும் வரிகள் செய்தியை விளக்குகின்றன.

மக்களிடையே பல்வேறுவிதமான நம்பிக்கைகள் எப்போதும் உண்டு. மகப்பேறு என்பது இம்மைக்கும், மறுமைக்கும் உள்ள பற்றுக்கோடு ஆகும் என்பதை,

*"மகவி லாமையால் ஆற்றநாள் மறுமையோடு இம்மை*
*புகல் இலான் என வருந்துவான்"* (வலை எண்-22)


என்ற வரிகள் உணர்த்தும்.

நன்மை நடக்கப்போவதை நம் உடல் உறுப்புக்களே காட்டிவிடும் என்ற நம்பிக்கை உண்டு. பரதவ மன்னனுக்குக் குழந்தை கிடைக்கப் போவதை. அவனது வலது தோள் துடிப்பதுமூலம் அறிந்தானாம். சிலப்பதிகாரத்திலும் கண் இமை துடித்தல் எனும் நம்பிக்கை இருப்பதைக் காணலாம்.

வீட்டிற்கு வந்த விருந்தினரை வரவேற்று வேண்டியன அளிப்பது ஒருவரது கடமை. அதேபோல் அவர்கள் விடைபெற்றுச்செல்லும்போது ஏழடி அவர்கள் பின்செல்ல வேண்டும் எனும் மரபு அக்காலச் சமுதாயத்தில் இருந்திருக்கிறது. (இடைக்காடன் பாடல் எண்-34)

**முடிவுரை :**

புராணங்கள் இறைவனின் பெருமையை விளக்க வந்தவையாக அமைவதால். அவற்றைப் படிக்கும் மக்களும் இறைவன் பெருமையை உணர்ந்து. அவ்வீறை வழிபாட்டில் தம்மை ஈடுபடுத்திக்கொள்ளவேண்டும். மேலும் அப்புராணங்கள் மக்களுக்குச் சில வழிகாட்டுதல்களையும் நீதிகளையும் போதிக்கின்றன. கற்றறிந்தோர் புலமைச் செருக்கினால் மாறுபட்டுக் கொள்ளக்கூடாது என்பதையும்; வாய்பேசா ஊமையும் எது சரி. எது தவறு என்பதை உணர்ந்துகொள்ளும் ஆற்றலுடையவர் என்பதையும்; மன்னவனே ஆனாலும் பொறாமைக் குணத்தை விடுத்துப் புலவர்கள் சிறப்பை மதிக்கவேண்டும் என்பதையும்; உயர்ந்த பொருளை ஒருவர் கூறும்பொழுது மற்றவர் கவனமாகக் கேட்கவேண்டும் என்பதையும்; அவ்வாறு இல்லாவிடில் அவர்களுக்குத் தொல்லை ஏற்படும் என்பதையும்; இறைப்பற்றினால் இறைவனைச் சரண் புகுதலால் நம் கவலைகள். சிக்கல்கள் தீரும் என்பதையும் இப்படலங்கள் வாயிலாக அறியலாம்.



## நூல் மதிப்புரை

நூல் : **கானகக் கன்னி**
ஆசிரியர் : 'கல்வி' கோபாலகிருஷ்ணன்
வெளியீடு : சாகித்ய அகாதமி, இரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை, புதுதில்லி-110 001.
விலை : ரூ. 45 00
பக்கங்கள் : 78

'கானகக் கன்னி' எனும் தலைப்பிலான இந்நூல் 'கல்வி' கோபாலகிருஷ்ணன் என்பவரால் இயற்றப்பட்டுள்ளது இந்நூலில் குழந்தைகள் முதல் பெரியவர் வரையிலும் அறிந்து கொள்ள வேண்டிய தாவரங்களைப் பற்றிய அறிவியல் செய்திகள் படங்களுடன் அமைக்கப்பட்டுள்ளன. நூல் முழுமையும் கற்பனைப் பாத்திரமான வனதேவதையும் ( நூலின் தலைப்பு - கானகக் கன்னி) விறகு வெட்டியும் உரையாடுவதான வினாவிலும் விடையளித்தலு மாக அமைவு பெற்றுள்ளது.

தாமும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைப்பதே தாவர இனத்தின் கோட்பாடு என்று ஆசிரியர் அழுந்தக் கூறுகிறார். அத்துடன் அன்பே அறம், அன்பே ஒளி. அச்சந்தரும் இருள் ஒளிபோக்குவதைப் போல, அச்சத்தை அன்பு அடியோடு அகற்றிவிடுகிறது என்ற மனித நேயச் சிந்தனையையும் வெயிப்படுத்துகின்றார்.

உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோராவர் என்பது முதுமொழி ஆயின் தாவரங்கள் உண்ணும் உணவையும், உயிர்க்காற்றாகிய பிராணவாயுவையும் தருவதன் மூலம் ஒருபடி மேலான போற்றுதலுக்கு உரியதாகின்றது என வலியுறுத்தும் ஆசிரியர் அவற்றைப் போற்றவேண்டிய அவசியத்தையும் உணர்த்துகின்றார்.

தெளிவான அச்சும், முகப்பு அட்டையும் கொண்ட இந்நூல் தாவரங்கள் குறித்த அறிவியற் கலைச் சொற்களையும் கொண்டு பயன்படும் வகையிலும், அது கொண்டுள்ள செய்தியால் மக்களைப் பண்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளது

**-கா. மனோகரன்,** எம்.ஏ., எம்.ஃபில்.,